**OS. No. 27/2018, P.W : 1 (மாதையன்), நாள் :24.03.2026**

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அகிலா பேகத்திற்கு உதவியாக விவசாயம் செய்தும், நீதிமன்றத்திற்கு சென்று வந்ததாக கூறியுள்ளேன். அந்த வழக்கு என்ன வழக்கு, வழக்கு எண் மற்றும் எந்த நீதிமன்றத்திற்கு சென்று வந்தேன் என்று எனக்கு தெரியுமா என்றால் வழக்கிற்கு நான் செல்லவில்லை, விவசாயம் மட்டும் செய்து வந்தேன். நான் விவசாயம் மட்டும் செய்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்கள். 205/2000, 117/2002 ஆகிய வழக்குகளை அகிலா பேகம் எனக்கு எதிராக தாக்கல் செய்து ஆகிலா பேகத்திற்கு ஆதரவாக இந்த மேற்படி வழக்குகளில் தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. அகிலா பேகம் எப்போது இறந்தார் என்றால் 05.02.2008ம் தேதி இறந்துவிட்டார். அகிலா பேகத்தின் இறப்பு சான்றிதழ் எப்போது வாங்கினேன் என்றால் 08.03.2008ம் தேதி வாங்கினேன். நான் அகிலா பேகத்தின் இறப்பு சான்று வாங்கியதாக சொல்லப்படும் தேதியான 08.03.2028ம் தேதி பொய் என்றும், நான் தாக்கல் செய்துள்ள EX A2 ஆவணத்தில் அகிலா பேகத்தின் இறப்பு சான்றிதழ் 28.04.2017ம் தேதி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அகிலா பேகத்திற்கு இறப்பிற்கு சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. அகிலா பேகத்திற்கும், எனக்கும் முன்விரோதம் இருந்த காரணத்தினால் தான் நான் அவருடைய இறுதி சடங்கிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. உயில் சாசனம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியும். எங்களுடைய உறவினர்கள் யாராவது சேலத்தில் வசித்து வருகிறார்களா என்றால் வசித்து வருகிறார்கள். சேலத்தில் உள்ள என் மனைவின் தங்கை என்ன வேலை செய்து வருகிறார் என்றால் வீட்டு வேலை செய்து வருகிறார். என் மாமனாரின் பெயர் என்ன என்றால் P.V. பெரியசாமி ஆகும். என் மாமனாருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 6

பெண்கள் மற்றும் ஒரு ஆண் வாரிசும் உள்ளார்கள். அவருடைய பெண்களில் ஒருவர் வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். எந்த ஊரில் வழக்கறிஞராக வேலை செய்து வருகிறார் என்றால் சேலத்தில் வேலை செய்து வருகிறார். அகிலா பேகம் எந்த இடத்தில் இறந்தார் என்றால் சேலத்தில் இறந்தார். யாருடைய வீட்டில் வசித்து வந்தார் என்றால் அன்பு நகரில் உள்ள அகிலா பேகத்தின் கணவருடைய சொந்தகாரர் வீட்டில் வசித்து வந்தார். அவர்களுடைய பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அகிலா பேகத்தின் கணவருடைய சொந்தகாரர் யாராவது இந்த உயில் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. உண்மையில் அகிலா பேகம் மீது உயில் எழுதப்பெற்று இருந்தால் அவர்களுடைய உறவினர்கள் சாட்சி கையொப்பம் செய்து இருப்பார்கள் என்றும் அவ்வாறு இல்லாத காரணத்தினால் தான் சாட்சி கையொப்பம் அந்த உயில் பத்திரத்தில் வாங்கவில்லை என்றால் சரியல்ல. உயில் பத்திரத்தில் போடப்பட்டுள்ள கையொப்பம் அகிலா பேகத்தின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான், என்னுடைய உறவினர்களுடைய ஆலோசனையின் பேரில் தான் மோசடியாக இந்த உயில் பத்திரத்தை தயாரித்து உள்ளேன் என்றால் சரியல்ல. அகிலா பேகத்தின் கணவர் பெயர் என்ன என்றால் பஷிர் அகமது ஆகும். அவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. அகிலா பேகத்திற்கு என் மீது உயில் பத்திரம் எழுத எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. அகிலா பேகம் இறக்கும் சமயத்தில் அவருடைய கணவர் உயிருடன் இருந்தார் மற்றும் அவருடைய மகளான பிரதிவாதியும் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். பட்டா மாற்றம் செய்வதற்கு 15.05.2008ம் தேதியில் கிராம நிர்வாக அலுவரிடம் மனு கொடுத்ததற்கான இரசீதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளேன். நான் இரசீதை வழக்கறிஞரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் 7வது பாராவில் அமினா பேகம் மேற்படி பட்டாவை வைத்துக்கொண்டு என்னுடைய

அனுபவ சுவாதினத்தில் இருந்த கருவேல மரங்களை வெட்டி எடுத்து சென்றுவிட்டார் என்பதை குறித்து காவல் நிலையத்தில் நான் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் 9வது பாராவில் பிரதிவாதியும், அவருடைய சமுகத்தினரும் சேர்ந்து கொண்டு தாவா சொத்தை 3ம் நபருக்கு விற்பனை செய்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன் அந்த 3ம் நபரின் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்பதால் தான் அவர்களுடைய பெயரை நான் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. நானும், சாட்சிகளும் தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அகிலா பேகம் எனக்கு எவ்வித உயிலும் எழுதிகொடுக்கவில்லை என்றும், நான் தாவா சொத்தையும், அகிலா பேகத்தையும் பராமரித்து வந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.